1981 ஆகஸ்ட் 31]

[பிற்பகல் 1-00]

8. அரசினர் தீர்மானங்கள்—(தொடர்ச்சி)

(ஆ) பார்வையாளர்கள் மாடத்திலிருந்து கோஷங்கள் எழுப்பியது குறித்து நடவடிக்கை.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''இன்று (31-8-81) காலை சுமார் 11-50 மணி அளவில் சட்டமன்றப் பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப்பட்டுள்ள—

(1) மதுரை, பசும்பொன் நகர், மதுரை பாண்டியன் தெரு 78-சி, சந்திரன் இல்லத்தில் இருக்கும் திரு. பி. டி. ராமு என்பவரின் மகன் பரமன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்,

(2) மதுரை, 74, வைத்தியநாதபுரம் சித்தம்மாள் இல்லத்தில் இருக்கும் திரு. சிதம்பரம் பிள்ளை என்பவரின் மகன சி. ராமகிருஷ்ணன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்

பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது."

அவர்கள் மூன்று நாட்கள் வெறும் காவல் தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டுமென்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

திரு. என். எஸ். வி. சித்தன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரையைச் சேர்ந்த இரண்டு இளைஞர்களும் தவறு செய்துள்ளனர் என்பதில் கருத்து வேறுபாடு இல்லை. அவர்கள் உணர்ச்சி வசப்பட்டு செய்திருக்கலாம் என்ற காரணத்தால் மூன்று நாள் என்பதை ஒரு நாள் இந்த அவை கலையும் வரை தண்டனை என்று மாற்றும்படி மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு திரு. சித்தன் அவர்கள் கூறியது, அவர்கள் செய்தது தவறு, தண்டிக்கப்பட வேண்டியது தான் என்பதை ஒத்துக் கொண்டார்கள். தண்டனையைக் குறைக்கக் குறைக்க மேலும் மேலும் கோஷங்கள் போடவும் துண்டு பிரசுரங்கள் போடவும் தைரியம் ஏற்பட்டு விடும், பயம் ஏற்படாது. அதற்கு ஊக்கம் தருவதுபோல் இருக்கக் கூடாது. ஆனாலும் ஒரு நாள் போதும் என்ற உணர்வு மன்றத்தினரிடம் இருக்கும் காரணத்தால் தீர்மானத்தில் 'மூன்று நாட்கள்' என்று இருப்பதை 'ஒரு நாள்' என்று திருத்திக் கொள்ளலாம்.

எனவே, நான் உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க முன்பு மொழிந்த தீர்மானத்திற்குப் பதிலாக கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்—

''இன்று (31-8-81) காலை சுமார் 11.50 மணி அளவில் சட்டமன்றப்பேரவை பார்வையாளர் மாடத்திலிருந்து சில கோஷங்களை எழுப்பியதற்காக உடனே காவலில் வைக்கப் பட்டுள்ள—

(1) மதுரை பசும்பொன் நகர், மதுரை பாண்டியன் தெரு 78-சி, சந்திரன் இல்லத்தில் இருக்கும் திரு. பி. டி. ராமு என்பவரின் மகன் பரமன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்,

(2) மதுரை-74, வைத்தியநாதபுரம் சித்தம்மாள் இல்லத்தில் இருக்கும் திரு. சிதம்பரம் பிள்ளை என்பவரின் மகன் சி. ராமகிருஷ்ணன் என்று சொல்லிக்கொள்ளும் நபரும்

பெரும் குற்றம் புரிந்துள்ளனர். அவர்களுடைய இச்செயல் பேரவையை அவமதிக்கும் பெரும் குற்றம் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.

அவர்கள் ஒரு நாள் வெறும் காவல் (சிம்பிள் இம்பிரிசன்மென்ட்) தண்டனை அளிக்கப்பட்டு தண்டிக்கப்பட வேண்டும் என்று இப்பேரவை தீர்மானிக்கிறது.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

2. தகவல் கோரல்—(தொடர்ச்சி)

(இ) பேரவை அலுவல்—அரசினர் சட்ட முன்வடிவுகள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசுத் தரப்பில் இன்னும் எட்டு சட்ட முன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படு வதற்காக இருக்கின்றன. இன்னும் அரைமணி நேரந்தான்